**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No**. 56/2020

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜீ (எ) அண்ணாமலை | கணவர் பெயர் | : ---- |
| தகப்பனார் பெயர் | லேட்.ஆறுமுகம் | வயது | : 57 |
| கிராமம் | விருதாசம்பட்டி | நாள் | : 03.06.2026 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

இன்று 03.06.2026 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 17.12.1973 ம் தேதியிட்ட வாதியின் தந்தை ஆறுமுக கவுண்டர் பிரதிவாதிகளின் தந்தை மன்னாதன் மற்றும் வாதியின் தந்தை வழி பாட்டி பச்சியம்மாள் ஆகியோர் சேர்ந்து எழுதிக்கொண்ட பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் **வ.சா.ஆ 1** ஆகும்.

2. 19.09.1976 ம் தேதியிட்ட வாதி மைனராக இருந்தபோது, வாதியின் தாயாரை பாதுகாவலராக நியமித்து வாதியின் தந்தை எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் **வ.சா.ஆ 2** ஆகும்.

3. 16.06.2020 ம் தேதியிட்ட விருதாசம்பட்டி கிராம ச.எண்.292/1 க்கான பட்டா எண்.948 கணினி பதிவிறக்க நகல் **வ.சா.ஆ 3** ஆகும்.

4. 16.06.2020 ம் தேதியிட்ட விருதாசம்பட்டி கிராம ச.எண்கள்.289/2, 289/4 மற்றும் 289/6 க்கான பட்டா எண்.1113 கணினி பதிவிறக்க நகல் **வ.சா.ஆ 4** ஆகும்.

5. 16.06.2020 ம் தேதியிட்ட விருதாசம்பட்டி கிராம ச.எண்.289/5 க்கான பட்டா எண்.947 கணினி பதிவிறக்க நகல் **வ.சா.ஆ 5** ஆகும்.

6. 22.06.2020 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான கையேட்டு மதிப்பு கணினி பதிவிறக்க நகல் **வ.சா.ஆ 6** ஆகும்.

7. 14.05.1978 ம் தேதியிட்ட பிரதிவாதிகளின் தாயார் பெயரில் உள்ள கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

(கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு 17.06.2026 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.